33

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – பள்ளிகளில் சத்துணவு உட்கொள்ளும் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வாரத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் வேக வைத்த முட்டை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் (சஉதி.3) துறை

அரசாணை (நிலை) எண்.176

நாள். 17–09–2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
புரட்டாசி மாதம் 1ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 அரசாணை (நிலை) எண்.499, பிற்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள் 26–05–1989.
2 அரசாணை (நிலை) எண்.73, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 27–04–1998.
3 அரசாணை (நிலை) எண்.95, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 16–06–2004.
4 அரசுக் கடித (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 06–04–2005
5 அரசாணை (நிலை) எண்.47, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 13–05–2006.
6 அரசாணை (நிலை) எண்.50, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 19–05–2006.
7 அரசாணை (நிலை) எண்.51, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 24–05–2006.
8 அரசாணை (நிலை) எண்.60, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 24–04–2007.
9 அரசாணை (நிலை) எண்.69, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 11–05–2007.
10 அரசாணை (நிலை) எண். 85, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 14.07.2008.

மேலும் படிக்கப்பட்டது:–

11 சமூக நல இயக்குநரின் ந.க.எண்.35472/சஉதி(தி.1)/2010, நாள் 16.09.2010.

------

ஆணை:–

மேலே ஒன்பதில் படிக்கப்பட்ட அரசாணையில், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான ஜூலைத் திங்கள் 15 ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடப்படும் என அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 15.07.2007 முதல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில்



42

சத்துணவு உட்கொள்ளும் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் சத்துணவுடன் சேர்த்து வாரத்தில் மூன்று முட்டைகள் வழங்கிட ஆணையிடப்பட்டது.

2. சென்னை கோட்டூர்புரத்தில் அரசு உருவாக்கியுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் திறந்து வைத்து பேருரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாக இந்த பிரமாண்டமான நூலகத்தை திறந்து வைக்கும் இந்த நேரத்தில் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு சிறுவர், சிறுமியர்க்கும் வாரத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் வேக வைத்த முட்டைகள் வழங்கப்படும் என்று மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன்".

3. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், சமூக நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவில் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வேக வைத்த முட்டைகள் வழங்கவும், அவ்வாறு வாரத்தில் ஐந்து நாட்களிலும் முட்டைகள் வழங்கும் போது முட்டை உண்ணாத மாணவ / மாணவியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வாழைப்பழம் வழங்கலாம் என்றும் இத்திட்டத்தின் மூலம் 57.75 இலட்சம் பள்ளி மாணவ/ மாணவியர் பயன் பெறுவார்கள் என்றும் இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.125.35 கோடி செலவினம் ஏற்படும் என தெரிவித்து உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

- பள்ளிகளில் சத்துணவு உட்கொள்ளும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வேக வைத்த முட்டைகள் வழங்கப்படும்.

- முட்டை உண்ணாத மாணவ / மாணவியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வாழைப்பழம் வழங்கப்படும்.

- இத்திட்டத்தை செயல்படுத்த சுமார் ரூ.125.35 கோடி அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

- வாரத்தில் ஐந்து நாட்களிலும் முட்டைகள் வழங்கும் திட்டம் மற்றும் முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் வாழைப்பழம் வழங்கும் திட்டத்தினை இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து செயல்படுத்தப்படல் வேண்டும்.

- வாரத்தில் ஐந்து நாட்களிலும் முட்டைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படினும் ஏற்கனவே செவ்வாய்க்கிழமை 20 கிராம் வேகவைத்த கொண்டைக்கடலை / பச்சைப்பயறு, வெள்ளிக்கிழமை 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு வருவது தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



43

5. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் இத்திட்டத்தினை செயல்படுத்திட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் இத்திட்டத்தின் செயல்பாட்டை கண்காணிக்குமாறு சமூக நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தரமான முட்டைகள் வழங்கும் பொருட்டு ஏற்கனவே மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள பிற நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு. எண். 138/SS(RT)/Fin.(SW)/2010, நாள் 17-09-2010 வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்(பொறுப்பு)

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை-5.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18/9
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை) சென்னை – 18/9.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5/35/79 மற்றும் மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை – 113.
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை, சென்னை- 6.
பள்ளிக் கல்வித்துறை இயக்குநர், சென்னை – 6.
தொடக்கப்பள்ளி கல்வித் துறை இயக்குநர், சென்னை-6.
ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், சென்னை –5.
பழங்குடியினர் நலத்துறை ஆணையர், சென்னை-5.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5.
முதன்மை வனபாதுகாப்பு அலுவலர், சென்னை-5.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை-2.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சென்னை-10.
நகல்:-
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பு செயலாளர், சென்னை - 9
நிதி (சந) துறை, சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2, ச.ந.7) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.